## இலங்கை போக்குவரத்துச் சபை – 2013

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல்

சபை தொடர்ச்சியாக நட்டம் அடைந்ததன் காரணமாக தேறிய சொத்துக்கள் பாரியளவில் நெருக்கடிக்குள்ளாகிய காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தேறிய சொத்துக்கள் ரூபா 26,426,203,650 தொகையான மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் இதன் காரணமாக திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் வேறு நிதி உதவி இன்றி தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்த போது 2011 முதல் 2013 வரையான காலத்தில் நடைமுறைப் பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்காகவுள்ள நடைமுறைச் சொத்துக்களின் அளவு மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் 34 சதவீதமான கீழ்மட்டத்தில் காணப்பட்டதுடன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இந்த நிலை 42 சதவீதமாகக் காணப்பட்டது. செலுத்த வேண்டிய பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமை, அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதிகள் இந்த நிலைமை ஏற்படுவதற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியீட்டற் செயற்பாடுகளாகக் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 918,918,360 தொகையான அரசின் மானியம், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 08

நியமத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னோக்கிய ரீதியில் சீராக்கும் நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்படும் முன்னைய காலப்பகுதிக்குரித்தான சீராக்கங்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,284,409,369 தொகையான முன்னைய ஆண்டிற்கான சீராக்கம்.

(ii) முன்னைய ஆண்டிற்குரித்தான ரூபா 12,311,100 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரய மாற்றங்கள் மற்றும் ரூபா 4,080,250 தொகையான திரண்ட பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கங்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம்.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16

(i) நியமத்தின் பிரகாரம் சொத்தொன்று பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் முதல் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபை சொத்துக்களைக் கொள்வனவு செய்த ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு செய்யாமலும் அகற்றப்படுகின்ற ஆண்டிற்காக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யும் கொள்கை பின்பற்றப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த ரூபா 2,248,561,384 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான பேரூந்துகளிலிருந்து 2005 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 2,235 பேரூந்துகள் மற்றும் அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு தொடர்ந்தும் ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட பேரூந்துகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2005 ஆம் ஆண்டின் போது இலங்கை போக்குவரத்தச் சபை மீளத் தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது ஒன்றிணைக்கப்பட்ட 11 கூட்டிணைந்த பேரூந்து கம்பனிகளுக்கும் 11 பிரதேச போக்குவரத்துச் சபைகளுக்கும் உரிய நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மற்றும் மீள் மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்படாமல் தேறிய பெறுமதி ரூபா 3,511,335,966 தொகையான நிலையான சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிக்கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 319,799,319 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவைகளின் பெறுமதியை தனித்தனியாக இனங்காணாது கணக்கீட்டு நியமத்திற்கு முரணானதாக காணி மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம் அதாவது ரூபா 159,899,660 தொகை கட்டிடங்களின் பெறுமதியாகக் கருதி 2.5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

(i) நிதிக்கூற்றுக்களில் குத்தகைப் பொறுப்பு காண்பிக்கப்படுகையில் அக் குத்தகையிடப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதி அல்லது செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தவணைப்பணத்தின் தற்போதைய பெறுமதி எனும் இரண்டில் குறைந்த பெறுமதியைக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் குத்தகைப் பொறுப்பு கிரய அடிப்படையிலும், வட்டிப் பெறுமதி தவணைக் கணிப்பீட்டின் போது கூட்டு முறை (Sum of digit method) அடிப்படையிலும் கணிப்பிடப்பட்டு ரூபா 835,144,111 ஆக குத்தகைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) குத்தகை தொடர்பாக பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- காலப்பகுதியின் இறுதியில் ஆகக் குறைந்த குத்தகைத் தவணைப்பணம் மற்றும் அதன் தற்போதைய பெறுமதி இணக்கமொன்று

- ஒரு ஆண்டிற்குக் குறையாத காலத்திற்கு, ஒரு ஆண்டிற்கும் மேலான மற்றும் 05 ஆண்டுகளுக்குக் குறைவான மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்குரிய கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியில் எதிர்கால குத்தகைத் தவணைப்பணத்தின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதியின் கூட்டுத்தொகை

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவுகளின் ஒதுக்கீடு தொடர்பாக நிறுவனத்தினால் அனுமதியளிக்கப்பட்ட அலகு கடன் முறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட பிரயாண அனுமதிப்பத்திரத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 275,432,614 தொகையான பிரயாண அனுமதிப்பத்திர வருமானம் பெறவேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசின் மானியமாக மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்த 11 பேரூந்துகளின் பெறுமதியான ரூபா 38,728,360 தொகை கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டின் போது கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு கணக்குகளில் கைவிடப்பட்டிருந்த ரூபா 4,950,000 பெறுமதியான 03 கெப் வண்டிகளுக்காக ரூபா 756,061 பெறுமானத்தேய்வு குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் உற்பத்தி நட்டத்தை கணிப்பீடு செய்யும் போது ரூபா 97,592,416 தொகையான ஆரம்ப மூலப்பொருள் இருப்பு ரூபா 98,981,347 தொகையான இறுதி மூலப்பொருள் இருப்பு மற்றும் ரூபா 2,545,655 தொகையான ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி சீராக்கப்படாமையினால் உற்பத்தி நட்டம் ரூபா 3,934,586 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தலைமை அலுவலகத்தின் மூலம் பணம் செலுத்தும் அடிப்படையில் 06 பிரதேச வேலைத் தளங்களுக்கு இரண்டு தனியார் கம்பனிகளால் வழங்கப்பட்ட ரூபா 66,971,529 தொகையான உதிரிப்பாகங்களின் பெறுமதி தலைமை அலுவலகத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அம்பாறை டயர் ஆலைக்கு 22 டிப்போக்களிலிருந்து கிடைத்த ரூபா 3,048,771 பெறுமதியான 49 காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன் அக் காசோலைகளின் பெறுமதி காசேட்டிலிருந்து அகற்றப்பட்டு டிப்போக்களிலிருந்து பெறவேண்டியதாகவோ அல்லது பிரதேச வேலைத்தளங்களின் வருமானத்திலிருந்து குறைப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது வங்கி இணக்கக்கூற்றில் தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) தலைமை அலுவலகத்தின் வங்கிக் கணக்கிற்குரிய காசேட்டை தயாரிக்கும் போது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,164,545 தொகையான மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காண்பிக்கும் போது ரூபா 30,000,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிலையான கட்டளையின் கீழ் மற்றும் வங்கியினால் நேரடியாக அறவிடப்பட்ட ரூபா 678,447 தொகையான வங்கிக் கட்டணம், மேலதிகப்பற்று வட்டி மற்றும் காசோலைப் புத்தகக் கட்டணம் மற்றும் நேரடியாக வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 8,772,390 தொகை என்பன கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஐ) தலைமை அலுவலகத்தின் மூலம் பணம் செலுத்தும் அடிப்படையில் நாட்டில் அமைந்துள்ள டிப்போக்களுக்காக இரண்டு தனியார் கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட உதிரிப்பாகங்களின் பெறுமதி தலைமை அலுவலகத்தின் செலவினக் கணக்கிற்கும் கடன்கொடுத்தோர் கணக்குகளிலும் பதியப்படாமையினால் அந்தக் கம்பனிகளுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 204,426,310 தொகையினைத் தீர்த்து வைக்காது முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இதில் ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 10,000,000 தொகையான இரண்டு காசோலைகள் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பதுளை மற்றும் மொனராகலை டிப்போக்களின் நாளாந்த வருமானத்திலிருந்து செய்யப்பட்ட செலவினங்களுக்கு உரிய சீராக்கங்கள் செய்யப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் வைப்புச் செய்யப்படாத வருமானக் கணக்கில் ரூபா 4,038,128 தொகையான செலவு மீதியொன்றைக் காட்டியது.

(ஓ) 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 3,098,066 தொகையான கணக்காய்வுக் கட்டணங்களுக்குரிய நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 செயற்பாடற்ற மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய கண்காணிப்பின்மை மற்றும் பலவீனமான உள்ளகக் கட்டுப்பாடுகளின் காரணமாக நீண்டகாலமாக இனங்காணப்படாதும் கணக்கிணக்கம் செய்யப்படாததுமாக பல கணக்குகளின் ரூபா 9,935,375,095 கூட்டுத்தொகையான வரவு மீதிகளும் ரூபா 26,054,948,782 செலவு மீதிகளும் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இம் மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கீழ் காணப்பிக்கப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களின் ஊடாக உண்மையான நிலைமை வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட செலவு மீதி நடப்பாண்டில் ரூபா 23,784,018 இனால் அதிகரித்திருந்ததுடன் நடப்பாண்டின் போதும், ரூபா 13,548,035 தொகையான வரவு மீதியும் ரூபா 5,669,752 தொகையான செலவு மீதியும் இக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாடற்ற மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,232,231,164 தொகையான 66 வரவு மீதிகளும், ரூபா 2,010,924,185 தொகையான 23 செலவு மீதிகளுமாக அசையாத சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக முழுமையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்துவதற்கும் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கும் 2002 யூலை 30 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் படி 2012 ஆம் ஆண்டின் போது அச் சொத்துக்களும் பொறுப்புகளும் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான முழுமையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமையின் காரணமாக மீண்டும் 2013 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடப்பாண்டின் பிரயாண அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 699,411,540 ஆக இருந்த போதிலும், ஓட்டப் பிரிவினால் பேணப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 706,074,270 ஆனமையால் ரூபா 6,662,730 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்படவில்லை.

(ஆ) சபை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்கு சேவையினை வழங்குவதற்காகவும் அந்த நிறுவனத்திலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்பாக நிதிக்கூற்றிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கிடையிலும் முறையே ரூபா 22,533,642 மற்றும் ரூபா 2,793,817 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே சபையின் நிதிக் கூற்றுக்களுக்கும் போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களுக்கும் இடையே முறையே ரூபா 27,015,360 மற்றும் ரூபா 3,086,283 வேறுபாடுகளுக்கும் காரணம் விளக்கப்படாதிருந்ததுடன் கணக்குகள் நீண்ட காலமாக இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு மற்றும் நம்பிக்கைக் காப்புறுதி பிணை முதலீட்டுக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,346,092 ஆக இருந்த போதிலும், அதற்குரிய வங்கியின் 02 சேமிப்புக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,769,316 ஆனமையால் இரண்டு கணக்குகளுக்கிடையே காணப்பட்ட ரூபா 1,423,224 வேறுபாட்டிற்குரிய காரணம் விளக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கிரயம் ரூபா 936,662,390 ஆகவும் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 935,329,390 ஆகவும் இருந்த 909 பேரூந்துகள் பாவனைக்குதவாததாகக் காணப்பட்டதுடன் இந்த எண்ணிகை தொழில்நுட்பப் பிரிவின் தகவல்களின் பிரகராம் 963 பேருந்துகளாகக் காணப்பட்டன. அதன் பிரகாரம் பெறுமதி இனங்காண முடியாத 54 பாவனைக்குதவாத பேரூந்துகளை கணக்குகளுக்குக் கொண்டுவரப்படாமைக்கான காரணம் அல்லது விளக்கமளித்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 25 டிப்போக்களினதும் 03 பிரதேச அலுவலகங்களினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உதிரிப்பாகங்கள் மற்றும் காகிதாதிகளின் இருப்பு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 158,937,921 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 141,035,554 ஆனமையால் ரூபா 17,902,367 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 தொங்கல் கணக்குகள்

10 ஆண்டுகளுக்கு மேலான காலமாக மீதி மாற்றப்பட்டு முன்கொண்டுவரப்பட்டிருந்த தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 17,664,474 தொகையான வரவு மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்கண்டு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) முதலீடுகள் | 414,766,630 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள். |
| (ஆ) பிரதேச களஞ்சியத்தினதும் டயர் ஆலையினதும் இருப்புக்கள் | 55,595,432 | இருப்பிற்கான மெய்மையாய்வு அறிக்கை. |
| (இ) எரிபொருள் இருப்பு | 53,848,518 | 93 டிப்போக்களினதும், எரிபொருள் களஞ்சியங்களினதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான இருப்பிற்கான மெய்மையாய்வு அறிக்கை. |
| (ஈ) கடன்பட்டோர் | 165,395,432 | டிப்போ மற்றும் ஏனைய 128 நிறுவனங்களுக்குரிய மீதிகளின் விரிவான பட்டோலை |
| (உ) ஏனைய பெறவேண்டிய வருமானங்கள் | 236,363,333 | டிப்போ மற்றும் ஏனைய 121 நிறுவனங்களுக்குரிய விரிவான பட்டோலை |
| (ஊ) கடன்கொடுத்தோர் | 16,017,906,552 | பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும். |
| (எ) ஊழியர் பிணை வைப்பு | 1,346,092 | ஊழியர் பிணை வைப்புப் பதிவேடு |
| (ஏ) வங்கி மீதியும் வங்கி மேலதிகப்பற்றும் | 193,698,325 | 89 வங்கிக் கணக்குகளின் வங்கி இணக்கக் கூற்றுக்கள் |
| (ஐ) இலங்கை லங்கம சேமலாப நிதியம் | 1,860,824,837 | சேமலாப நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிக்கொடை கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடத்துனர்களினதும் காசாளர்களினதும் நிலுவைக் காசு முறையே 14,896,436 தொகையாகவும் ரூபா 36,646,763 தொகையாகவும் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடத்துனர்களின் நிலுவைப்பணம் ரூபா 2,282,363 இனால் குறைவடைந்திருந்ததுடன் காசாளர்களின் நிலுவைப்பணம் ரூபா 4,793,161 இனால் அதிகரித்திருந்தது. அந்தப் பணத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகத்தினாலும் டிப்போக்களினாலும் வழங்கப்பட்டிருந்த போதும் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 7,279,940 பெறுமதியான காசோலைகளுக்குப் பதிலாக வேறு காசோலைகளை வழங்குவதற்கோ அல்லது பணத்தைச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 128 டிப்போக்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களிலிருந்து அறவிட வேண்டிய வியாபார மற்றும் நானாவித கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 166,428,634 ஆக இருந்தது. அவற்றில் 50 சதவீதமான அளவு 1 இற்கும் 8 வருடங்களுக்கும் இடையேயான பழைய கடன் மீதியாக இருந்த போதிலும் சபையினால் இந்தக் கடனை அறவிடும் இயலுமை தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொண்டு அறவீடுகள் ஐயத்திற்குட்பட்ட மீதிகளுக்காக ஐயக்கடன் ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.2 ஆம் பந்தி | நிதிக்கூற்றில் காணப்படுகின்ற நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய வைப்புக்கள் முறையே ரூபா 413,070,433 தொகை, ரூபா 7,749,998 மற்றும் ரூபா 350,103 தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 396(ஈ) | 13 வங்கிக் கணக்குகளிலிருந்து வழங்கப்பட்ட தினம் முதல் 06 மாதங்களைக் கடந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,893,916 தொகையான 78 காசோலைகளை வருமானத்திற்கு எடுத்து கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(iii) ஆம் பந்தி | கதிர்காமம் ஓய்வு மண்டபத்தின் கட்டம் I மற்றும் II இனை நவீன மயப்படுத்துவதற்குரிய ஒப்பந்தத்திற்காக 2012 ஏப்ரல் மாதத்தின் போது செலுத்தப்பட்ட ரூபா 5,250,915 தொகையான முற்பணம் அந்த ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதியில் 56 சதவீதமாக இருந்ததுடன் முற்பணத் தொகையிலிருந்து ரூபா 500,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,974,484,387 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,458,341,252 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 483,856,865 இனால் குறைவடைந்திருந்தது. சபையின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 2,089,398,436 இனால் அதிகரித்திருந்த போதிலும் பிரயாணிகள் போக்குவரத்து வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பன ரூபா 2,621,150,907 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சி குறைவடைந்தமை தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சபையின் பற்றாக்குறை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது சபையின் பற்றாக்குறை 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 9,745,324,000 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 12,709,377,742 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்கு எதிராக வெளித்தரப்பினரால் 160 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 64 வழக்குகளுக்காக ரூபா 136,819,456 தொகை நட்டஈடாகக் கோரப்பட்டிருந்தது.

(ஆ) பேரூந்துகளுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக சபையினால் 19 வெளித்தரப்பினர்களுக்கு எதிராக 19 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் 10 வழக்குகள் தொடர்பில் ரூபா 5,658,435 நட்டஈடு கோரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பிக்கையான இலகுவான பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையொன்றை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவைக்கு அர்ப்பணித்த வினைத்திறனான பதவியணியினர்களின் மூலம் நிறுவனத்தின் சகல வளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் சமத்துவத்தைப் பேணிச் செல்லல் சபையின் நோக்காக இருந்ததுடன் இந்த நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் சபைக்குச் சொந்தமான ஒட்டுமொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை 7,926 வரை அதிகரிப்பதற்கும், சராசரியாக நாளொன்றிற்கு ஓட்டத்தில் ஈடுபடுகின்ற பேரூந்துகளின் அளவை 6,000 ஆகப் பேணிச் செல்வதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் சபைக்குச் சொந்தமான பேரூந்துகளின் எண்ணிக்கை 7,607 ஆக இருந்ததுடன் அதில் ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை 4,720 மாத்திரமாகும். அதில் நாளொன்றிற்கு சராசரியாக 4,373 பேரூந்துகளே ஓட்டத்தில் ஈடுபட்டமையால் நாளாந்த நேர அட்டவணையின் தேவையான 6,000 பேரூந்துகளில் 73 சதவீத அளவே ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

(ஆ) ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட பேரூந்துகளைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது 603,004,472 கிலோமீற்றர் ஓடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சராசரிகளினதும் நடத்துனர்களினதும் வெற்றிடம் மற்றும் தொழில்நுட்ப காரணங்களின் அடிப்படையில் ஓடக்கூடியதாக இருந்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கை 343,691,735 மாத்திரமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பயணிகள் போக்குவரத்திலிருந்து கிடைத்த வருமானம் கிலோமீற்றருக்கு ரூபா 62.31 ஆக இருந்த போதிலும் அதற்குரிய செயற்பாட்டுச் செலவினம் கிலோ மீற்றருக்கு ரூபா 76.29 ஆனமையால் கிலோமீற்றருக்கு ரூபா 13.98 செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக பேரூந்து ஓட்டத்திலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தில் அந்த பேரூந்துகளின் ஓட்டத்திற்காக செலவிட்ட கிரயத்தை ஈடுசெய்ய முடியாதிருந்தது.

(ஈ) கண்டி பிரதேசத்திற்குரிய 07 டிப்போக்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவற்றின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(i) 04 டிப்போக்களில் செயற்பாட்டுச் செலவினத்தை விஞ்சிய பங்களிப்பொன்று பெறப்பட்டிருந்ததுடன் அது கிலோமீற்றருக்கு ரூபா 11.23 முதல் ரூபா 16.25 வரையான வீச்சில் காணப்பட்டது. எனினும் நிலையான செலவினங்களைச் சீராக்கியதன் பின்னர் ஒரு டிப்போவிலிருந்து மாத்திரம் இலாபப் பங்களிப்பு காண்பிக்கப்பட்டிருந்தது. அது கிலோ மீற்றருக்கு ரூபா 1.64 ஆகும்.

(ii) பிரதேசத்திலுள்ள 07 டிப்போக்களுக்குரிய நேர அட்டவணையின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 586 பேரூந்துகள் தேவையாக இருந்த போதிலும், ஓட்ட நிலையில் 426 பேரூந்துகள் மாத்திரம் காணப்பட்டதுடன் அதில் 155 பேரூந்துகள் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட பழையதாக இருந்தது.

(iii) 06 டிப்போக்களுக்குரிய 294 வீதிகளுக்காக 562 பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சராசரியாக 370 பேரூந்துகள் மாத்திரமே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. பேரூந்துகள் இன்மை, சாரதி, நடத்துனர்களின் பற்றாக்குறை, மலைப் பிரதேசங்களுக்காக தேவையான சிறிய பேரூந்துகள் இன்மை மற்றும் மலைப்பாங்கான வீதிகள் உடைந்திருந்தமை போன்ற காரணங்களினால் பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடாதிருந்ததாக அந்த டிப்போக்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான காரணங்களினால் மீளாய்வாண்டின் போது 04 டிப்போக்களினால் 49 வீதிகளுக்கான ஓட்ட நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

(iv) பிரதேசங்களுக்குரிய 07 டிப்போக்களில் ஓட்ட நிலையில் காணப்படுகின்ற 426 பேரூந்துகளில் புகைப்பரிசோதனைச் சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் என்பன முறையே 66 மற்றும் 71 பேரூந்துகளுக்கு மாத்திரமே பெறப்பட்டிருந்தன.

(உ) 2013 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் 200 பேரூந்துகளும் அரசாங்க மானியத்தின் அடிப்படையில் 54 இருக்கைகளுள்ள 250 பேரூந்துகளும் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குத்தகை அடிப்படையில் 16 பேரூந்துகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் சபைக்குரிய 02 பிரதான சாரதி பயிற்சிக் கல்லூரிகளிலிருந்தும் அவற்றுக்குரிய 02 கிளைகளிலிருந்தும் தொடர்ச்சியாக நட்டம் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் ஓட்டுமொத்த நட்டம் ரூபா 15,165,507 ஆக இருந்ததுடன் அது மொத்த பயிற்சியளித்தல் வருமானத்தில் 97 சதவீதமாக இருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது பொத்துஹெர, மொறட்டுவ மற்றும் நுகேகொட போன்ற சாரதி பயிற்சிக் கல்லூரிகளினால் கனரக வாகனங்களுக்காகவும் இலகு வாகனங்களுக்காகவும் முறையே 553 பேருக்கும் மற்றும் 507 பேருக்கும் பயிற்சியளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 470 பேர்களுக்கும் மற்றும் 332 பேர்களுக்கும் மாத்திரமே பயிற்சியளிக்க கூடியதாக இருந்தது. போதியளவில் வாகனம் காணப்படாமை மற்றும் விரிவுரையாளர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டமை இதற்கான காரணங்களாக இருந்தன.

(ஏ) சபைக்குரிய பேரூந்துகளை பழுதுபார்ப்பதற்காக நடாத்தப்பட்ட பிரதேச வேலைத் தளங்களின் நிலையான கிரயங்களை ஈடு செய்வதற்காக ஒவ்வொரு செயற்பாடுகளினதும் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்று டிப்போக்களிலிருந்து அறவிடப்படுவதுடன் வருடாந்த நிலையான கிரயத்தை தீர்ப்பதற்குரிய இலக்கை அடைந்து கொள்வதற்கு அவ்வேலைத் தளங்கள் தவறியிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 162,690,214 தொகையான நட்டமொன்று வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.2 நிதியத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் கணக்குகள் பிரிவினால் பல்வேறு நோக்கங்களுடன் 21 நடைமுறைக் கணக்குகள் பல்வேறு வங்கிக் கிளைகளில் பேணப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களுக்கு இணங்க செலவிடப்படாமல் ஒவ்வொரு வங்கிக் கணக்கிற்கும் இடையே பணத்தை மாற்றி வேறு நோக்கங்களுக்கு நிதியைச் செலவிட்டு அவ்வங்கிக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

(ஆ) குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பேரூந்துகளுக்கான தவணைப் பணத்தை தாமதமின்றிச் செலுத்துவதற்காகவும், டிப்போக்களிலிருந்து கிடைக்கின்ற தவணைப் பணத்தை வேறு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதைத் தடுக்கும் நோக்கிலும் அதற்காகவும் தனிப்பட்ட நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நோக்கங்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது இந்தக் கணக்கில் ரூபா 139,180,532 தொகையொன்று சபையின் வேறொரு நிதித் தேவைக்காக இன்னுமொரு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. சபையில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியினால் தற்காலிக நிதி மாற்றலாக சபையினால் சுட்டிக் காட்டிய போதிலும் அவ்வாறு மாற்றப்பட்ட பணம் மீண்டும் அக்கணக்கிற்கு மாற்றப்படாமையினாலும் குறித்த பிரகாரம் டிப்போக்களிலிருந்து பணம் சேகரிக்கப்பட்டமையினாலும் கூட்டுமொத்தமாக ரூபா 44,030,000 தொகையான 16 தவணைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

இதனால் இக் கணக்கை உருவாக்கியதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கிலிருந்து சபையின் பல்வேறு கொடுப்பனவுகளுக்காக ரூபா 19,400,000 தொகையொன்று பெறப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு பகுதி மீண்டும் அக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சபையினால் பிணை வைப்பு முதலிட்டுக் கணக்கிலிருந்து பெறப்பட்டு தீர்க்கப்படாத பணம் ரூபா 76,388,217 ஆகும்.

(ஈ) சபையின் நிதி நிலையை முன்னேற்றுவதற்கு முகாமைத்துவம் தவறியமையினால் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட வங்கி மேலதிகப் பற்று வசதிக்காக ரூபா 133,943,803 தொகையான மேலதிகப் பற்று வட்டியொன்றைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் மேலதிகப் பற்று வட்டி செலுத்துதலுடன் ஒப்பிடும் போது 20 சதவீத அதிகரிப்பாகும்.

(உ) சபையினால் சுங்கவரிச் சலுகையின் கீழ் இந்தியாவின் கம்பனியொன்றிலிருந்து பேரூந்து உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக பணம் செலுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் பெயரில் மக்கள் வங்கியின் யூனியன் பிரதேச கிளையில் நடைமுறைக் கணக்கொன்று திறக்கப்பட்டு இலங்கை முகவர் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அக்கம்பனியால் கணக்குகள் பிரிவின் அங்கீகாரமின்றி அக்கணக்கின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பான மூல ஆவணங்கள் எதுவும் கணக்குகள் பிரிவில் காணப்படாததுடன் அக்கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் சபையின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியத்தின் கிழ் பேரூந்துகளைப் புனரமைப்பதற்காக ஓடக்கூடிய நிலையில் காணப்படாத பேரூந்துகளை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காகவே நிதி கிடைத்திருந்த போதிலும், சபையில் காணப்படுகின்ற நிதிக் கஷ்டங்களின் காரணமாக அந்த செயற்திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 433,994,700 தொகையிலிருந்து ரூபா 187,807,877 தொகையொன்று பழுதுபார்த்தல்களுக்குரித்தற்ற செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 02 வங்கிக் கணக்குகளிலிருந்து 60 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 90,084,281 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்காக 02 முதல் 05 மாதங்களுக்கிடையிலான காலமொன்று எடுத்திருந்ததுடன் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற சகல பிணைப்பணமும் ஒவ்வொரு ஊழியருக்காவும் தலைவரின் பெயரில் தனித்தனியாக சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்து அவர்கள் சேவையிலிருந்து விலகும் போது அதற்குரிய வட்டியுடன் மீளச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபைக்கு ஊழியர்களினால் வைப்புச் செய்யப்பட்ட பிணைப்பணமான ரூபா 77,341,309 தொகை பொது சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வட்டி சபையினால் பெறப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான ரூபா 319,799,319 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களுக்கான உரித்தை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் மெய்மையாய்வொன்று மேற்கொண்டு சொத்துக்களின் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது தெரிவித்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 3,785,755 தொகையான இருப்புக்களின் பற்றாக்குறையும் ரூபா 4,765,050 தொகையான மிகையும் தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நுகேகொட மற்றும் மொறட்டுவ சாரதி பயிற்சிக் கல்லூரிகளில் இலகு வாகனங்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளுக்காக ஒரு வாகனம் வீதம் மாத்திரம் காணப்பட்டமையால் பயிற்றுவித்தலுக்காக கிடைக்கின்ற விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் பயிற்சிக்கான செயன்முறைப் பரிசோதனை நடாத்தப்படும் தினங்களில் பயிற்சியளித்தல் முழுமையாக தடைப்படுகின்றது. இதனால் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 10 மணித்தியால செயன்முறை பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு அதிக காலம் எடுக்கின்றமை பயிற்சியாளர்களின் எண்ணிக்கை அளவினை அதிகரிப்பதற்கு தடையாக இருந்த போதிலும் அந்த நிலைமைக் கட்டுப்படுத்துவதற்காக முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நலன்களுக்காக ஊழியர் தண்டப்பண நிதியக் கணக்கிலிருந்து ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 80,562,905 தொகையான கடன் தவணைப் பணம் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்கள் தமது சேமலாப நிதிய மீதியை பிணையாக வைத்து பெறப்பட்ட கடன் பணத்திற்காக சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 251,115,777 தொகை தொடர்பில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இணங்காணப்பட்ட நட்டம்

சபையின் சேமலாப நிதியத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட வேண்டிய முறையே ரூபா 650,368,619 மற்றும் ரூபா 4,550,070,053 தொகைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு ரூபா 59,045,730 தொகை என்பன குறித்த திகதியில் உள்ளவாறு அனுப்பி வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ரூபா 69,810,367 தொகையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 3,561,706 தொகையும் மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக தலைமை அலுவலகத்தின் 46 ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கும் மேலும் இரண்டு அரச நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டு அந்த ஊழியர்களுக்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 11,400,250 தொகை ரூபா 14,106,278 மற்றும் ரூபா 15,117,370 தொகைகள் சபையினால் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை சபையினால் மீள் நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 05 வாகனங்கள் போக்குவரத்து அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன.

(இ) தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் சாரதியொருவர் கட்சி அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக சம்பளமாக ரூபா 117,375 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 97,462,160 கிரயமான 143 பேரூந்துகள் 2002 ஆம் ஆண்டின் போது வெஸ்கோ நிறுவனத்திற்கு புனரமைப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது. எனினும் வெஸ்கோ நிறுவனம் இது வரையிலும் செயற்படு நிலையில் காணப்படாமையினால் உரிய பேரூந்துகளை மீண்டும் சபைக்கு பெற்றுக் கொள்வதில் ஆபத்தொன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் கணக்குகளில் அது தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்திக்கு இணங்க சபைக்காக நிறுவனக் கட்டமைப்பு ஆட்சேர்த்தல் நடைமுறை, பதவியுயர்வு நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் என்பன தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆகஸ்ட் மாதம் வரையில் பிரதான சாரதிக் கல்லூரிகள் மற்றும் டிப்போ மட்டத்தில் 21 சாரதிக் கல்லூரிகள் என்பவற்றுக்கிடையே 09 சாரதிக் கல்லூரிகளில் ஓய்வுபெற்ற விரிவுரையாளர்கள் 13 பேர் பணிப்பொறுப்பு கையளித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர்களின் சாரதி விரிவுரையாளர் அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி சாரதி கல்லூரிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த விரிவுரையாளர்கள் வயதானமையின் காரணமாக சேவையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டால் சாரதி கல்லூரிகளை நடாத்திச் செல்வதில் ஆபத்தொன்று காணப்படுகின்றமையால் சாரதி விரிவுரையாளர்களை ஆட்சேர்க்கும் வரை தற்காலிக நடவடிக்கையாக அனுபவம் மற்றும் இயலுமையுள்ள சாரதிகளில் பொருத்தமான நபர்களைத் தெரிவுசெய்து பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 02 ஆண்டுகளும் 07 மாதங்களும் தாமதித்து அதாவது 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 முதல் 2017 வரையான ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அந்தக் காலத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்தில் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு ஏற்ற விதத்தில் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சபையின் நிதி நிலைமையைக் கவனத்திற் கொள்ளாது அடைய முடியாத நோக்கங்களையும், இலக்குகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.4 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 01 ஆம் திகதிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1.2 (அ) பந்தியின் பிரகாரம் சபையால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களை ஒப்பீடு செய்த போது 15 சதவீதம் முதல் 2,592 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) சபையின் பேரூந்துகளின் விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்படாமை |
| | | (ii) சொத்துக்களின் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வகையில் பொறுப்பளிப்புத் தன்மை கையளிக்கப்படாமை. |
| | | (iii) சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கணக்கீடு செய்தலில் உள்ளகக் கட்டுப்பாடு நலிவாக உள்ளமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம் | பெறவேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | முற்பணத்தைத் தீர்த்தல் | பெறப்பட்ட முற்பணம் உரிய செயற்பாடு நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (உ) | ஊழியர் பிணை வைப்பு | ஊழியர் பிணை வைப்பிற்காக பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியர் பிணை வைப்புப் பணம் சபையின் செலவினத்திற்காக பயன்படுத்தியமை. |
| (ஊ) | வங்கிக் கணக்குகள் | நிதிப் பிரிவினால் தேவையின்றி வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றமை |
| (எ) | பிரயாண அனுமதிப்பத்திர வருமானம் | பிரயாண அனுமதிப்பத்திர வருமானத்தைச் சேகரிப்பதற்காக தொடர் இலக்கத்துடன் அச்சிடப்பட்ட பட்டியல் பத்திரம் பயன்படுத்தப்படாமை |